O.S. 227/2022 நாள்: 02-07-2025

DW1 மகேஷ் த/பெ. பன்னீர்செல்வம்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 139/6 ஆகும். வழக்கு சொத்து 2ம் பிரதிவாதி திருக்கோவிலுக்கு சொந்தமானதாகும். 2ம்பிரதிவாதி திருக்கோவில் இந்து அறநிலையத்துறைக்கு உட்பட்ட து அல்ல என்றால் சரிதான். சிதம்பரம் நடராஜர் கோவில் தீட்சதர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். தீட்சதர்களால் நியமிக்கப்பட்டவர்கள் தான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 50 சென்ட் என்றால் சரிதான். இந்த 50 சென்ட்ம் வாதியின் முன்னோர்களால் 2ம் பிரதிவாதி கோவிலுக்கு வழங்கப்பட்டது என்றால் தெரியாது.

2. தாவா சொத்து வாதியின் பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தில் 15 காய்ப்பு தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரியல்ல, ஒரே ஒரு தென்னை மரம் தான் உள்ளது. 15 தென்னை மரங்கள், 20 வருடங்களுக்கு மேற்பட்டது வாதியின் பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 20 வருடங்களுக்கு மேற்பட்ட 15 தென்னை மரங்கள் தாவா சொத்தில் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக ஒரே ஒரு தென்னை மரம் உள்ளது என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் கிராமத்தில் முருகன் என்பவரது மகன் பாரதி என்பவர் வசித்து வருகிறார். தாவா சொத்தை பற்றி பாரதிக்கு தெரியும் என்றால் தெரியும்.

3. மேற்கண்ட பாரதிதான் இந்த வழக்கின் வா.சா. 2 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சியமளித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய வாதியின் பராமரிப்பில் வழக்கு சொத்து உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி வாதியின் பராமரிப்பில் தான் வழக்கு சொத்து இருந்து வருகிறது என்று எதிர்வழக்குரையில் கூறியிருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. நான் எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்திலும் 24 சென்ட் எனது அனுபவத்தில் இருந்து வருவதாக கூறப்பட்டுள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும், திருக்கோவிலில் அனுமதி பெற்று அனுபவத்தில் இருப்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டு வரி ரசீதை மட்டும் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் வீடு எதுவும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ-1 மற்றும் பி.சா. ஆ- 2 ஆவணங்கள் எனது பெயர் மற்றும் எனது தகப்பனார் பெயரில் இல்லை என்றால், சரிதான். எனது அப்பாவின் அண்ணன் ராஜகோபால் பெயரில் வீட்டு வரி ரசீதுகள் உள்ளது.

5. பி.சா. ஆ- 1 மற்றும் பி.சா. ஆ. 2 ஆவணங்கள் எனது பெரியப்பாவுடையது இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்துள்ள கிராமத்தில் எத்தனை வருடங்கள் வசித்து வருகிறேன் என்றால் 45 வருடங்கள் வசித்து வருகிறோம். எனக்கு திருமணம் நடைபெற்று 15 வருடங்கள் முடிந்து இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நான் தற்போது குடியிருந்து வருவது சொந்த வீடு தான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு, சொத்து வரி உள்ளது. வரிகளை நான் தான் செலுத்தி வருகிறேன். தாவா சொத்தின் குறிப்பிட்டுள்ள நான்கெல்லை சரிதான். நான் தற்போது குடியிருந்து வருவது தாவா சொத்தின் 50 சென்டுக்கு கீழ்புறத்தில் உள்ளது என்றால் சரிதான்.

6. என் பெயரில் வாதி காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரணைக்கு அழைக்கவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் 9 வது பாராவில் வாதி என் மீது கீழ்வேளூர் காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளித்ததின் பெயரில் வாதியை எச்சரித்து அனுப்பினார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா. ஆ. 5 குறியீடு செய்யப்பட்டுள்ள மனு ரசீது தான் வாதி என்மீது கொடுத்த புகார் மனு ஆகும் என்றால் சரிதான். வா.சா. ஆ-3 ஆக குறியீடு செய்யப்பபட்டுள்ள ஆவணம் வாதி, சொத்து வரி திருக்கோவில் சார்பாக செலுத்திய ரசீது ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. வா.சா. ஆ- 7 மற்றும் வா.சா. ஆ. 8 ஆவணம் தாவா சொத்துக்கு 2 ம் பிரதிவாதி வாதிக்கு கொடுத்த ரசீது ஆகும் என்றால் சரியல்ல. வா.சா. ஆ- 10 மற்றும் வா.சா. ஆ. 12 ஆவணங்கள் வாதியின் வழக்கறிஞரால் எனக்கு மற்றும் 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பபட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நான் எனது வழக்கறிஞர் மூலம்

பதிலறிவிப்பு என்றால் சரிதான். எனது பதிலறிவிப்பில் 24 செனட் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கீழ்புறத்தில் வாதி 19.12.2021 ம் தேதி வேலி வைக்கும்போது அதை நான் தடுத்ததால் தான் வாதி என் மீது புகார் அளித்தார் என்றால் சரியல்ல.

8. மீண்டும் 25.02.2022 ம் தேதியில் வாதி வேலி அமைக்கும்போது நான் தடுத்து நிறுத்தியதால் வாதி என் மீது புகார் அளித்தார் என்றால் சரியல்ல. நான் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவன் என்றாலும், வாதி பராமரிப்பில் உள்ள தாவா சொத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கீழ்புறத்தில் 15 தென்னை மரங்கள் உள்ளது. தாவா சொத்தில் உள்ள மரங்களை தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நாளது தேதி வரையில் தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் பராமரிப்பிலும் இருந்து வருகிறது என்றாலும் எனது அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்குரையில் கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர. மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,- கீழ்வேளூர்.